# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2065/35 - 2018 අප්‍රේල් මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.04.05

*2065/35 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கோவை இல.: DSK/LND/07/FI/22/ACQ/139.

ஒரு பகிரங்கத்தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் : அ.க.பி 139 (மேலதிக இல. 1)**

கீழ்க் குறிப்பிடப்படும் இடமானது அம்பாந்தோட்டை மாவட்டத்தில், வடக்கு கிருவாபத்துவே இல் குறிப்பிடப்படும் கடுவன பிரதேச செயலாளர் பிரிவில் மீகஹஹேன எனும் ஊரில் அமைந்துள்ளது.

01. **துண்டு இல. 33**

காணியின் பெயர்: கலுவேகெவத்த மற்றும் மாறகஹவத்த; விபரம்: தோட்டம், 10 - 75 வருடங்கள் வரை வயதுடைய தென்னை மரங்கள் 11, 75 வருடங்கள் வயதுடைய 03 பலா மரங்கள், 10 வருடங்கள் வயதுடைய 63 ஈரப் பலா மரங்கள், கூரையிடப்பட்ட சீமேந்தினால் கட்டப்பட்ட சுவர்களுடைய பாடசாலைக் கட்டிடம் ஒன்றும் உள்ளது; விஸ்தீரணம் : 02 ஏக்கர் 00றுட் 00 பேச்சர்ஸ்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு கடுவன பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

உரிமையை உறுதிப்படுத்துவதற்காக தேவையான காணிப் பத்திரத்தையும் ஏனைய ஆவணங்களையும் விசாரணையின் போது முன்வைக்கப்பட வேண்டும்.

இரேஷா லியனகம,
பிரதேச செயலாளர்,
கடுவன.

பிரதேச செயலகம்,
கடுவன,
2018, ஏப்பிறல் 04.

4 - 707